ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2249/55 - 2021 ඔක්තෝබර් මස 16 වැනි සෙනසුරාදා - 2021.10.16

*2249/55 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ் திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் இல. 03-தெபெரவெவ வட்டாரத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட ஹேவா ஜுவங் கங்கானம்கே ஞாணதிலக விஜேராம என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுண என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் இலக்கம் 03-தெபெரவெவ வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக பரண லியனகே சாலி குணரத்ன என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான ரவீந்திர சுபாஷன வெதகே ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1)(அ) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு பரண லியனகே சாலி குணரத்ன என்பவர் திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் இலக்கம் 03-தெபெரவெவ வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**ரவீந்திர சுபாஷண வெதகே,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
திஸ்ஸமஹாராம பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாந்தோட்டை,
2021, ஒற்றோபர் 13.

10-549

1A - G 35130 — 50 (2021/10)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ் தம்பலகாமம் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*தம்பலகாமம் பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், தம்பலகாமம் பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட நகுமதுல்லா மொஹமட் ரஜீன் என்பவர் அங்கம் வகிக்கின்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின்கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான தம்பலகாமம் பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட சுயேச்சைக் குழுத் தலைவரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக இக்பால் நஜீபுள்ளா என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*தம்பலகாமம் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான சங்கரப்பிள்ளை சுதாகரன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு இக்பால் நஜீபுள்ளா என்பவர் தம்பலகாமம் பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**சங்கரப்பிள்ளை சுதாகரன்,**
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*தம்பலகாமம் பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*திருகோணமலை,*
*2021, ஒற்றோபர் 15.*

*10-550*

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1) ஆம் பிரிவின் கீழ் இராஜாங்கனை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*இராஜாங்கனை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கட்சி உறுப்புரிமை இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) ஆம் பிரிவின் கீழ், இராஜாங்கனை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட ஹேவாரத்னகே இந்திராணி என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான இராஜாங்கனை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக கொக்கல மரக்கலகே நிரோஷனி சுனேத்ரா கருணாரத்ன என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இராஜாங்கனை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான கெங்காதரன் முகுந்தன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ (1) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு கொக்கல மரக்கலகே நிரோஷனி சுனேத்ரா கருணாரத்ன என்பவர் இராஜாங்கனை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**கெ. முகுந்தன்,**
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*இராஜாங்கனை பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*அநுராதபுரம்,*
*2021, ஒற்றோபர் 12.*

*10-551*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*